விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 085 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 30 செவ்வாய்க்கிழமை (14.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## சாதாரண தரப் பரீட்சை பிற்போடப்படலாம்

### கல்வி அமைச்சர் சுசில்



(கொழும்பு)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பிற்போடப்படலாம் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி 11

## தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள எரிபொருளை விநியோகிக்க முடியாது

### எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர



(கொழும்பு)

தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள தேர்தல் ஆணைக்குழுவுக்கும் வேட்பாளர்களுக்கும் எரிபொருளை விநியோகிக்க முடியாது.

மேலதிகமாக எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான நிதியை திரட்டிக் கொண்டு எரிபொருளை இறக்குமதி செய்ய குறைந்தது மூன்று அல்லது ஆறு மாதங்களேனும் செல்லும்.

ஆகவே விரைவாக எரிபொருள் விநியோகிக்க முடியாது என தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு அறிவித்துள் 11

# தேர்தலுக்கு சென்றால் மக்கள் சிரமப்படுவர்

## தேர்தலுக்கு முன் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும் - அமைச்சர் பிரசன்ன



(கம்பஹா)

தற்போதைய நிலையில் தேர்தல் நடத்தப்பட்டால் பொது மக்கள் சிரமப்படுவார்கள். தேர்தலுக்கு முன் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா, உடுகம்பல பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற அரசியல் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் நேற்று தெரிவித்தார். 11

## 40 தொழிற்சங்கங்கள் நாளை வேலைநிறுத்தம்

### இலங்கை ஸ்தம்பிக்கும் அபாயம்

(கொழும்பு)

துறைமுகங்கள், புகையிரதம், மின்சாரம், வங்கிகள், மருத்துவமனைகள் மற்றும் ஆசிரியர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட 40 அரச துறையினர் நாளை புதன்கிழமை நாடு தழுவிய ரீதியில் ஒரு நாள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். 11

### கொடிகாமம் தவசிகுளத்தில்

## கிணற்றிலிருந்து பெண் ஒருவர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தவசிகுளம் பகுதியில் வீட்டுக் கிணற்றில் இருந்து பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் கொடிகாமம் தவசிகுளம் 11

### தேர்தலை நடத்தினால்

## ஐ.எம்.எப் நிபந்தனைகளை செயற்படுத்த முடியாது

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்



(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தினால் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை செயற்படுத்துவதில் பாதிப்பு ஏற்படும் என நிதி இரா 11

### உரிய நிதி கிடைக்காததால்

## தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்க

### தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் கூடுகின்றது



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான தீர்மானங்களை எடுப்பது பற்றி கலந்துரையாடுவதற்காக தேர்தல் ஆணைக்குழு மீண்டும் கூடவுள்ளது.

தேர்தலை நடத்தத் தேவையான நிதியை விடுவிக்குமாறு நீதிமன்றம் நிதி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்திருந்தாலும் அது பற்றிய சாதகமான பதில்கள் இதுவரை கிடைக்கவில்லை என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே இது தொடர்பில் ஆராய தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்வரும் நாட்களில் கூடவுள்ளது.

இதுபற்றி கலந்துரையாடி அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக் 11

## ரூபாயின் உயர்வு கற்பனை கதை

### ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)

டொலருக்கு நிகராக இலங்கை ரூபாயின் பெறுமதி உயர்வதாகக் கூறுவது அரசியல் நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு கற்பனை கதை என சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார். 11

## யாழில் வன்முறையுடன் தொடர்புடைய ஐவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 5 சந்தேகநபர்கள் கைது செய்யப் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி தருமலிங்கம் பூபதியம்மா



பிறப்பு 02.05.1932 இறப்பு 12.03.2023

அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தருமலிங்கம் பூபதியம்மா அவர்கள் 12.03.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தருமலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவநேசம், செல்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுப்பிரமணியம்(அமரர்), இராசய்யா(அமரர்), பத்மநாதன், நாகலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சரோஜினிதேவி, அருணந்தி, சுந்தரவடிவேல், செந்தில்வேல் (அமரர்), புஸ்பராணி, காந்திமதி, காந்தரூபி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இலட்சுமிகுமார், மணிமேகலை, சியாமளா, யோகேஸ்வரி, விமலராஜா, நித்தியானந்தம், சிவகுமாரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் துவாரகன் - அர்ச்சனா, விஜயாழினி - சந்துரு, விதுஷா, வினோஜன், தினேஸ், அன்பழகன், வேணுஜன், நீக்கிலன், ஜொனகிலன், றோசறி, கௌரிபாலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மயிலனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.03.2023) புதன் கிழமை காலை 10 மணியளவில் அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(14890) தகவல் :- குடும்பத்தினர்

# யாழ். இந்திய துணைத்தூதரக ஏற்பாட்டில் சிறப்புப் பட்டிமன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழப்பாணம் இந்தியா துணைத் துதராகத்தின் ஏற்பாட்டில் சிறப்புப் பட்டிமன்றமொன்று இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணியளவில் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

"இளம் தலைமுறையை வழிநடத்த வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கா? சமூகத்துக்கா?" எனும் தலைப்பில் இடம்பெறும் இப் பட்டிமன்றத்தின் நடுவராக இந்தியப் பிரபல பட்டிமன்றப் பேச்சாளர் திருமதி கவிதா ஜவகர் நடுவராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இளம் தலைமுறையை வழி நடத்த வேண்டிய பொறுப்பு சமூகத்திற்கே என்ற தலைப்பில் வலம்புரி பத்திரிகை பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் மற்றும் செல்வி தயாளினி குமாரசாமி ஆகியோரும் இளம் தலைமுறையை வழி நடத்தும் பொறுப்பு பெற்றோருக்கே என்ற தலைப்பில் செந்தமிழ் சொல்லருவி லலீசன், திருமதி மதன் கோசலை ஆகியோரும் விவாதிக்கவுள்ளனர். (ம-7)

# பேராதனை மாணவர்களுக்கு மனநல பரிசோதனை

(கொழும்பு)

பேராதனை பல்கலைக் கழகத்திற்கு புதிதாக உள்வாங்கப்படும் அனைத்து மாணவர்களும் இந்த வருடம் முதல் உடல் மற்றும் உள மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக அதன் உபவேந்தர் பேராசிரியர் எம்.டி. லமவன்ச தெரிவித்துள்ளார்.

தற்போது நடைபெறும் உடற்கூறு பரிசோதனையுடன் கூடுதலாக உளவியல் பரிசோதனையும் நடத்தப்படும் என்றும், இதன் மூலம் மாணவர்களிடையே உள்ள மனநலப் பிரச்சினைகளை கண்டறிய முடியும் என நம்புவதாகவும் தெரிவித்தார். (ம-7)


# காணி விற்பனைக்கு


**யாழ்ப்பாணம் புத்தூரில் 72 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14883)

**074 318 7263 | 076 755 8606**


# மரண அறிவித்தல்



## இராசதுரை குமரேஸ்வரன் (சூட்டி)

### (உரிமையாளர் - ஸ்ரீ கிருஷ்ணா கிறீம் ஹவுஸ், அல்வாய்)

பிறப்பு 22.04.1974 இறப்பு 12.03.2023

வியாபாரிமூலை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் புதுக்கலட்டி, அல்வாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை குமரேஸ்வரன் அவர்கள் (12.03.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை - தவமணி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாலசுந்தரம் - செல்லம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும் சுகிதாவின் அன்புக் கணவரும் அக்ஷன், ஆர்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும் கருணாநிதி (தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை), பகிரதன் (ஆசிரியர்), பரமேஸ்வரன், வாசுகி, வாணி(குடும்ப நல மருத்துவமாது - கரவெட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ரஞ்சிதன் மற்றும் கரிஷன், குணதீபன் ஆகியோரின் சகலனும் சுபாஷ், துஷியந்தன், சுபதா, சுஜிதா, சுஜாத்தா, யசோதா, மதிஅழகி, காலஞ்சென்ற விஜயலதா ஆகியோரின் மைத்துனரும் தனுஜன், தர்சன், ஜனனி, அஜானா, பிரவின், துசோபன், தனுஷ்கா, ஹரிவத்சன், டாருக் ஆகியோரின் சித்தப்பாவும் அக்சிதா, ரிகாஷ், காவியா, சாமினி, சங்கவி ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 14.03.2023 செவ்வாய்க்கிழமை ஈமக்கிரியைகள் நடைபெற்று காலை 11.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதுக்கலட்டி,
அல்வாய் வடக்கு(அத்தாய்)
அல்வாய்.

தகவல்:- குடும்பத்தினர்

(C-6152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மீட்சிக்கே அரசு முன்னுரிமை வழங்கும்

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தினால் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை செயற்படுத்துவதில் பாதிப்பு ஏற்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அத்தோடு மீண்டும் அத்தியாவசிய சேவை விநியோக கட்டமைப்பில் நெருக்கடி ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆகவே பொருளாதாரத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது.

நாட்டில் நிதி நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் பொருளாதார மீட்சிக்கு அரசாங்கம் என்ற ரீதியில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மீண்டும் பிற்போடும் சாத்தியம்

## மக்களின் ஜனநாயக உரிமை கவலைக்குரியது என்கிறது பவ்ரல்

(கொழும்பு)

**வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளில் தாமதம், தொழிற்சங்க போராட்டம் உள்ளிட்ட காரணிகளினால் தபால் மூல வாக்கெடுப்பை பிற்போட்டு, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மீண்டும் பிற்போடுவதற்கான சாத்தியம் அதிகளவில் காணப்படுகிறது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.**



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது. உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடையுத்தரவுக்கு அப்பாற்பட்ட வகையில் ஜனாதிபதி செயற்படுகிறார்.

நிதி விடுவிப்பு விவகாரத்தில் இறுதி தீர்மானத்தை நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி எடுக்க வேண்டும் என குறிப்பிட்டு திறைசேரியின் செயலாளர் பொறுப்பில் இருந்து விலகியுள்ளார்.

2023 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டு அல்ல, நாட்டில் தேர்தல் என்பதொன்று இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக குறிப்பிட்டுள்ளார். தேர்தலுக்கு ஆளும் தரப்பினர் தயாராக இல்லாத காரணத்தினால் அவர்கள் தேர்தல் குறித்து அக்கறை கொள்ளவில்லை.

பொருளாதார பாதிப்பு காரணமாக தேர்தலை பிற்போட்டால் எதிர்வரும் காலங்களில் தேர்தல்களை நடத்துவது நிச்சயமற்றதாகி விடும். தேர்தலை நடத்தியதால் எந்த நாடும் வங்குரோத்து நிலை அடையவில்லை. வங்குரோத்து நிலையில் இருந்து மீள வேண்டுமாயின் மக்களாணையுடன் புதிய அரசாங்கம் தோற்றம் பெற வேண்டும்.

நிதி நெருக்கடி என்று குறிப்பிட்டுக் கொண்டு வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகள் தாமதப்படுத்தப்படுகின்றன. மறுபுறம் தொழிற்சங்க போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இவ்வாறான காரணிகளினால் தபால் மூல வாக்களிப்பை பிற்போட்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மீண்டும் பிற்போடுவதற்கான சாத்தியம் காணப்படுகிறது.

தேர்தலை நடத்தக் கூடாது என்று உறுதியான நிலைப்பாட்டில் இருந்து கொண்டு செயற்பட்டால் ஒரு சிறந்த தீர்மானத்தை எடுக்க முடியாது. தேர்தலை நடத்துவதற்கு திகதி நிர்ணயிப்பதும் நிதி நெருக்கடி என்று குறிப்பிட்டுக் கொண்டு தேர்தலை பிற்போடுவதும் என்று இருந்தால் தேர்தல் தொடர்பில் நாட்டு மக்களின் நம்பிக்கை சிதைவடையும் என அவர் தெரிவித்தார். (நி)

# இலங்கைக்கு படையெடுக்கும் இந்திய தொழிலதிபர்கள்

(கொழும்பு)

சுமார் 92 பேர் அடங்கிய வட இந்திய தொழிலதிபர்கள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதியன்று இந்திய நகையக சம்மேளனத் தலைவர் சுலானி தலைமையில் இந்தக் குழுவினர் இலங்கை வரவுள்ளனர்.

முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் இவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதியன்று இலங்கையின் தொழிலதிபர்களை சந்திக்கவுள்ளனர்.

இந்திய தொழிலதிபர்களின் வருகை மற்றும் சந்திப்பு ஏற்பாடுகளை இலங்கை - இந்திய தொடர்பாளர் மனவை அசோகன் மேற்கொண்டுள்ளார். (நி)

# விமல் வீரவன்சவுக்கு எதிராக பிடியாணை பிறப்பிப்பு

(கொழும்பு)

வழக்கு விசாரணைக்கு சமூகமளிக்காத பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விமல் வீரவன்ச உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிராக கருவாத்தோட்டம் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு பிரதம நீதவான் பிரசன்ன அல்விஸ் பிடியாணை பிறப்பித்துள்ளார். (நி)

## யாழ்.பல்கலை பேராசிரியர்கள் உட்பட

# தொல்பொருள்ஆலோசனைக் குழுவிற்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்



(கொழும்பு)

தொல்பொருள் ஆலோசனைக் குழுவிற்காக புதிய உறுப்பினர்களை நியமித்து புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுரவிக்ரமநாயக்கவினால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இரண்டு வருட காலப்பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள இந்த குழுவின் மூலம் தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன.



யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் ப.புஷ்பரட்ணம், யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உட்பட 19 உறுப்பினர்கள் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். (நி)

## ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தல் பொது வேட்பாளராக ரணில்

### பச்சைக் கொடி காட்டியது பெரமுன

(கொழும்பு)

அடுத்த வருடம் ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்து வருகின்றது என அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த காரணத்தினாலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசாங்கம் ஒத்திப்போடுவதற்குத் தயாராகின்றது.

இது தொடர்பில் ஓரிரு மாதங்களுக்கு முன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ ஆகிய மூவரும் ஒன்றிணைந்து இது குறித்து ஆலோசனை நடத்தியுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவைப் பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு மொட்டுக் கட்சியின் ஆதரவைப் பசிலிடம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ரணிலைப் பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு பசில் ராஜபக்ச பச்சைக் கொடி காட்டியிருந்தார் என்று தற்போது தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# காற்றாலை திட்டங்களின் திறனை அதிகரிக்குமாறு அதானி குழுமம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் 340 மெகா வட் காற்றாலை மின் திட்டங்களை தொடங்க அனுமதி பெற்றுள்ள அதானி குழுமம், அதன் திறனை 500 மெகா வட்டாக உயர்த்துமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. இந்த முன்மொழிவு குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக இலங்கையின் மின்சாரம் மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க தெரிவித்தார். அத்தோடு அநுராதபுரத்தில் இருந்து மதுரை வரை செல்லக்கூடிய மின்சாரம் கடத்தும் பாதைத் திட்டம் ஒன்றை நிர்மாணிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் டி.வி.சானக்க தெரிவித்தார்.

இலங்கையில் குறித்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் இந்தியாவும் தீவிர ஆர்வம் காட்டி வருகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்டப் போட்டி

## வட்டக்கச்சி மத்திய கல்லூரி அணி சம்பியன்



இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தேசிய மட்ட பிரிவு இரண்டு 20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான இறுதிப் போட்டி கிளிநொச்சி வட்டக்கச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் குருநாகல் மலியதேவ மாதிரிப் பாடசாலை அணியும் கிளிநொச்சி வட்டக்கச்சி மத்திய கல்லூரி அணியும் மோதியிருந்தன. குறித்த இறுதிப் போட்டியில் வட்டக்கச்சி மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் குருநாகல் மலிய தேவ மாதிரிப் பாடசாலையை வெற்றி பெற்று சம்பியனாகியது. குறித்த போட்டியில் சிறந்த பந்துக் காப்பாளராக குருநாகல் மலியதேவ மாதிரிப் பாடசாலை வீரர் தெரிவு செய்யப்பட்டார்.

இதே வேளை சிறந்த வீரராக வட்டக்கச்சி மத்திய கல்லூரி வீரர் எஸ்.சுதர்சன் தெரிவு செய்யப்பட்டார். குறித்த நிகழ்வில் இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் பண்டார லீலாரத்தின கலந்து கொண்டார். (4-6-316)

# இலங்கையின் ஐ.சி.சி டெஸ்ட் சம்பியன்ஷிப் கனவு கலைந்தது

இலங்கை கிரிக்கெட் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், நியூஸிலாந்து அணி 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், 1-0 என்ற கணக்கில் நியூஸிலாந்து அணி முன்னிலை பெற்றுள்ளது.

அத்துடன், இலங்கை அணி இப்போட்டியில் தோல்வியடைந்ததன் மூலம் ஐ.சி.சி டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை இழந்தது.

மறுபுறம் அவுஸ்திரேலியா அணியுடனான இறுதி டெஸ்டில் விளையாடி வரும் இந்தியா அணி, ஐ.சி.சி டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

ஐ.சி.சி டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில், இந்தியா அணி, அவுஸ்திரேலியா அணியுடன் மோதும்.

கிறிஸ்ட்சர்ச் மைதானத்தில் கடந்த 9ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.


இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, முதல் இன்னிங்ஸிற்காக 355 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய நியூஸிலாந்து அணி, 373 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதனையடுத்து 18 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய, இலங்கை அணி, 302 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதற்கமைய இலங்கை அணி, நியூஸிலாந்து அணிக்கு 285 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய நியூஸிலாந்து அணி, 8 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், நியூஸிலாந்து அணி 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 16 ஆம் திகதி வெலிங்டனில் ஆரம்பமாகவுள்ளது. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2783

கருணிகா




விதுனா




கவிநயன்




தாருஷ்




கபிலா






யுவதேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் புழு மழை

(பீஜிங்)

சீனாவின் பீஜிங் நகரில் புழுக்கள் மழை குறித்த வீடியோ மற்றும் புகைப்படங்கள் சமூக வலைத் தளங்களில் வைரலாகி வருகிறது.

சீனாவில் பீஜிங் நகரில் புழுக்கள் மழை பெய்து மக்களை பீதியில் ஆழ்த்தியுள்ளது.

வினோதமான விசித்திரமான இயற்கை நிகழ்வுகள் வரும்போது நாம் அதிர்ச்சியில் ஆழ்ந்து விடுகிறோம். இந்த மழையில் பூச்சிகளும் இருந்ததாகவும் மழைக்குப் பின்பு நகரின் பல தெருக்களில் உள்ள வாகனங்கள், கடைகள் மற்றும் தெருக்களில் புழுக்கள் அதிகளவு தோன்றியதால் மக்களும் அச்சடைந்ததாக கூறப்படுகின்றது.

இது குறித்து ஆராய்ச்சியாளர்கள் கூறுகையில், இது திடீரென உருவான சூறாவளியால் இந்த புழுக்களை நகருக்குள் கொண்டு வந்திருக்கலாமென தெரிவித்தனர். (நி)

# ஒஸ்கார் விருதை தட்டிச் சென்றது RRR படத்தின் 'நாட்டு நாட்டு' பாடல்



(வோஷிங்டன்)

RRR திரைப்படத்தில் இடம்பெற்ற கீரவாணி இசையில் சந்திபோஸ் வரிகளில் உருவான "நாட்டு நாட்டு" பாடல், சிறந்த பாடலுக்கான ஒஸ்கார் விருதை வென்றுள்ளது.

சந்திபோஸ் வரிகளில், கீரவாணி இசையில் உருவான இப்பாடலை ராகுல் சிப்லிகுனி, காலா பைரவா ஆகியோர் பாடியிருந்தனர்.

ராஜமௌலி இயக்கிய RRR தெலுங்கு திரைப்படம் 2022 மார்ச் 25 ஆம் திகதி வெளியாகியது. 1280 கோடி இந்திய ரூபாவை இப்படம் வசூலித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்படத்தின் நாட்டு நாட்டு பாடல் கடந்த ஜனவரி மாதம் கோல்டன் குளோப் விருதையும் வென்றிருந்தது.

ஏற்கனவே இசையமைப்பாளர் ரஹ்மான் இரண்டு ஆஸ்கார் விருதுகளை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 45ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 30.01.2023(திங்கட்கிழமை) அன்று சிவபதமடைந்த எமது அன்பு மகன்

அமரர். **நிற்சிங்கம் நிபோஜன்(நிபோ)**

ஊடகத்துறையிலே உலகம் போற்றும்
மன்னவனாய் வலம் வருதல் கண்டு
மகிழ்ச்சியுடன் நாமிருந்தோம் எங்கள் மகனே
உன் புன்முறுவல் பூத்த முகம் கண்டு
எங்கள் பெருங்கவலை பறந்தோடி விடும்.

கையிலே கமராவுடன் கம்பீரமாய்- நீ
நடந்து சென்றாய்-அன்று
இன்று கடுகதி ரெயிலுக்கு இரையாகி
உன் உறவுகள் சுமந்து வர
வந்த வினை ஏதடா மகனே


உலகமெல்லாம் பெருமகனாய் நீ வீறு
நடை போடுகிறாய் என்று- நாங்கள்
பெருமிதம் கொள்கின்ற வேளைதனில்
பாவியெமன் ஏன் பறித்தான் உன் உயிரை.

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 13.03.2023 திங்கட்கிழமை காலை கீரிமலை புனிததீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வு 15.03.2023 நாளை புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இ)

சேற்றுக்கண்டி, முரசுமோட்டை. தகவல்- குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



அளவெட்டி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்.

**தம்பு இராசையா**

மண்ணில்-07.12.1938 விண்ணில்-09.03.2023

எமது சங்கத்தின் ஓய்வு பெற்ற அங்கத்தவரான அமரர்.தம்பு இராசையா. 09.03.2023 ஆம் திகதி மரணமடைந்துள்ளார்.

இவரது குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம். (சி-6150)

பிரிவால் துயருறும்- அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

# இராசிபலன்

14.03.2023
மாசி 30, செவ்வாய்க்கிழமை
சப்தமி பிற்பகல் 5.21 மணிவரை

கேட்டை பின்னிரவு - 4.36 மணிவரை
சுபநேரம் -10.51-12.21 மணிவரை
இராகுகாலம்- 3.21-4.51 மணிவரை

சந்திராஷ்டமம் - கார்த்திகை
காரடையா நோன்பு

வளவன்

**மேஷம்** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், உடல் நலனில் கவனம் தேவை, வார்த்தைகளில் நிதானம் தேவை, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**ரிஷபம்** குடும்பத்தில் சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், கனவு பலிதமுண்டு, பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், உறவினர் பகை மாறும்.

**சிம்மம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், செய்தொழில் மேன்மையுண்டு, தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், செயற்பாடுகளில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பிரபலமானவர்களின். ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், அலைச்சல்கள் சற்று கூடும் நாள்.

**மகரம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும் நாள்.

**கும்பம்** என்றோ நடைபெறலாம் என நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**மீனம்** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

தன் உள்ளத்தோடு செய்யும் போராட்டமே உயர்ந்த போராட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் விழிப்புணர்வு தொடர்பில் யாழில் மாபெரும் நடைபவனி






**(யாழ்ப்பாணம்)**

**புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் புற்றுநோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கு ஆதரவைக் காட்டவும் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபவனி இடம்பெற்றது.**

யாழ். போதனா வைத்தியசாலையின் புற்றுநோய்ப் பிரிவின் ஏற்பாட்டிலும் இருநூறாவது ஆண்டு விழாவினைக் கொண்டாடும் யாழ். பரியோவான் கல்லூரியுடன் இணைந்து நேற்றுக் காலை இந்த நடைபவனி மேற்கொள்ளப்பட்டது.

நடைபவனியானது யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு பிரதான வீதி ஊடாக யாழ்ப்பாணம்போதனா வைத்திய சாலை வந்தடைந்து மீண்டும் பரியோவான் கல்லூரியை சென்றடைந்தது. இதில் கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள், வைத்தியசாலைச் சமூகம், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர். (4-6-33-104)

# எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களுக்கு மிரட்டல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடிப் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களுக்கு மிரட்டல் விடுக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு திருத்த வேலை காரணமாக எரிபொருள் நிரப்ப முடியாது என ஊழியர் கள் தெரிவித்த நிலையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ஊழியர்களை மிரட்டிவிட்டு சென்றுள்ளனர். இதன்போது அண்மையில் இடம்பெற்ற நாவற்குழி எரிபொருள் நிரப்பு நிலைய வாள்வெட்டுச் சம்பவத்தையும் அவர்கள் ஞாபகப்படுத்தி விட்டு சென்றிருப்பதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிரட்டல் விடுத்த சம்பவம் அங்கிருந்த பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ள நிலையில் சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# நவாலி ஸ்ரீ நாக ராஜா ராஜேஸ்வரி ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நவாலி ஸ்ரீ நாக ராஜா ராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 22 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறவுள்ள இவ் மஹோற்சவத்தில். எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (4-6)

# அடிக்கடி வீதிகளில் கொட்டப்படும் மணல்

(அராலி)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பருத்தித்துறை வீதியில் கடந்த சில நாட்களாக குடத்தனை சந்திக்கும் வல்லிபுரம் மாவடி சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் மணல் மண் இரவு வேளைகளில் வீதியில் கொட்டப்பட்டு காணப்படுகின்றது.

இதனால் விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதுடன் இரவு நேர பயணிகள் பல அசௌகரியங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். இவ்வாறு வீதிகளில் கொட்டப்படும் மணல் கொட்டப்பட்ட மறுநாள் இரவே காணாமல் போகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-104)



# உயர்தர 2023 பிரிவின் பரீட்சை திகதியில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தால் உயர்தர 2023 பிரிவு மாணவர்களுக்கு மூன்றாம் தவணைப் பரீட்சை தற்போது நடைபெறறு வருகின்றது.

இந்நிலையில் நாளை 15 ஆம் திகதி ஆசிரிய தொழிற் சங்க போராட்டம் இடம்பெறவுள்ளதால் அன்றைய தினமும் அதற்கு பிந்தைய தினங்களும் இடம்பெறவுள்ள பரீட்சைகள் பழைய நேர அட்டவணையில் குறிப்பிட்ட திகதியில் இருந்து ஒருநாள் பிந்திய திகதியில் நடைபெறும்.

இது தொடர்பான திருத்தப்பட்ட புதிய நேர அட்டவணை அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என வெளிக்கள நிலையத்தின் செயலாளர் ஆர்.குகநாதன் அறிவித்துள்ளார். (4-6)

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

(கரணவாய்)

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதாகிய நான்கு இந்திய மீனவர்களையும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஜே.கஜநிதிபாலன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டார்.

காரைநகர் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கடற்படையினரினால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் நீரியல் வளத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் இந்திய மீனவர்கள் நால்வரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (4-6-60)

(கரணவாய்)

பருத்தித்துறை நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் பன்னிரெண்டு பேரையும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் பொன்னுத்துரை கிருஷாந்தன் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கைது செய்யப்பட்டனர். நேற்று திங்கட்கிழமை வழக்கை விசாரித்த நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை, பன்னிரெண்டு பேரையும் விளக்கமறியலில் [illegible] உத்தரவிட்டார். (4-6-60)

# யாழ்.மாவட்ட ரீதியிலான மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி




(அராலி)

யாழ். மாவட்ட ரீதியிலான மாட்டுவண்டிச் சவாரி நேற்று முன்தினம் அராலிப் பகுதியில் இடம்பெற்றது. இந்த போட்டியில் 68 சோடி மாட்டுவண்டிகள் பங்குபற்றின.

இதில் ஏ,பி,சி ஆகிய மூன்று பிரிவுகளிலும் சங்குவேலியைச் சேர்ந்த கேமச்சந்திரன் என்பவரது மாடுகள் முதலிடம் பெற்றன. டி பிரிவில் அளவெட்டி பகுதியைச் சேர்ந்த ஆஞ்சலோ என்பவரது மாடுகள் முதலிடம் பெற்றன. அதுபோல ஈ பிரிவில் வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த கிருபா என்பவரது மாடுகள் முதலிடம் பெற்றன.

வட்டுக்கோட்டை இளைஞர்களின் ஏற்பாட்டில் குறித்த போட்டி இடம்பெற்றது. இந்த போட்டியை கண்டுகளிக்க பல நூற்றுக்கணக்கான இரசிகர்கள் வருகை தந்திருந்தனர். (4-6-104)

# காங்கேசன்துறைப் பகுதியில் இரு குண்டுகள் மீட்பு



(அராலி)

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீமன்காமம் பகுதியில் நேற்று முன்தினம் கண்ணிவெடி ஒன்று அடையாளம் காணப்பட்டது.

குறித்த கண்ணிவெடியானது தனியாருக்கு சொந்தமான வெற்றுக் காணி ஒன்றில் மண்ணில் புதைந்த நிலையில் இருந்துள்ளது.

அதேநேரம் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அன்ரனிபுரம் பகுதியில் கடலில் கரையொதுங்கிய நிலையில் கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை பொலிஸார் இது தொடர்பாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் வழங்கியுள்ளனர். பொலிஸ் விசேட அதிரடிப் படையினர். நீதிமன்றத்தின் நடவடிக்கையின் பின்னர் அந்த வெடிபொருட்களை மீட்டு செயலிழக்க செய்யவுள்ளனர். (4-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற வேண்டும்- கர்தினால் மல்கம்

(கொழும்பு)

52 நாள் ஆட்சி கவிழ்ப்பு நடவடிக்கையின் போது உயர் நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போது மட்டும் பாராளுமன்றம் ஊடாக நீதிமன்றத் தீர்ப்பை புறக்கணிக்க காரணம் என்னவென இலங்கை கத்தோலிக்க திருச்சபை கேள்வி எழுப்பியுள்ளது.

உள்ளூராட்சிதேர்தலுக் காக 2023 வரவு -செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட எந்தவொரு நிதியையும் நிறுத்தி வைப்பதைத் தடுக்கும் வகையில், இலங்கையின் உயர் நீதிமன்றம் மார்ச் 3 ஆம் இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்திருந்தது.

இது குறித்து நேற்று திங்கட்கிழமை ஊடக சந்திப்பில் பேராயர் மல்கம் ரஞ்சித் கேள்வி எழுப்பினார். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றமும் அரசாங்கமும் ஜனாதிபதியும் கடமைப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி)

# ஜனாதிபதிக்கு 'அபிநந்தன' விருது



(கொழும்பு)

தொழில்சார் சட்டத்துறையில் 50 வருடங்கள் பணியாற்றிய இலங்கை சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களைப் பாராட்டும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட "அபிநந்தன விருந்து விழா" நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு, சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றது.

50 வருட தொழில்சார் சட்டப் பணியை நிறைவு செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவும் இங்கு கௌரவிக்கப்பட்டதுடன் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, ஜனாதிபதிக்கு "அபிநந்தன விருது" வழங்கினார். (நி)

உ
சிவமயம்
ஓம் நமசிவாய

# சுந்தரத் தமிழால் தோத்தரிக்கும் சுந்தரலிங்கம்



**தமிழர் ஞானம் திருவாசகம்**
**மாணிக்கவாசகர் வாழ்வும் வாக்கும்**
**திருவெம்பாவை ஓதிய சுந்தரலிங்கம்**
**மானுடம் செழிக்க பொழிந்த மாமழை**
**"ஓம் நமசிவாய"**



சுந்தரலிங்கம் அவர்கள் மறைந்து ஒரு ஆண்டு ஆகிவிட்டது. அவர்களது நிகழ்வுகள், நடவடிக்கைகள் பற்றி மீட்டிப் பார்க்கிறேன். அம்பலவி முருகர் காட்டிய பாதையில் ஆண்டி ஐயாவும் முருகேசு அவர்களும் பயணித்தது. முன்னோர் வகுத்த வழியில் தொண்டாற்றி வந்தவர்கள். அதே பாணியில் சுந்தரலிங்கம் பரிபாலம் செய்து வந்தார்கள். ஈழத்துச் சிதம்பரத்தானுக்கு பொதுவாக இரட்டையர்களே பணி செய்யும் பேறு பெற்றவர்கள். இரட்டையர்களில் ஒருவராக சுந்தரலிங்கம் அவர்கள் தொண்டாற்றினார்கள்.

தந்தையாரிடமும், குப்பிழான் செல்லத்துரை அவர்களிடமும், இந்தியாவில் தர்மபுரம் ஆதீனத்திலும் பெற்ற பண்ணிசை அறிவோடு திருமுறையை ஓத வேண்டிய முறை தவறாது ஓதி வந்தவர். புலம்பெயர் உறவுகள் தங்கள் நாட்டில் இருந்தவாறே இவர் திருவாசகம் பாடுவதைக் கேட்டு உருகி அழுவார்கள். ஆலயப் பணியிலும், திருமுறைப் பணியிலும் ஈடுபட்டதோடு ஆலயத்தை விட்டகலாது பணியாற்றிய அருளாளர். திருவெம்பாவைக் காலத்தில் சபா மண்டபத்தில் தில்லைக் கூத்தன் முன்னால் திருவெம்பாவைப் பாடல்களை பாடும் போது உருகாதவர் யாருமில்லை.

ஆலய விடயங்கள், திருமுறை விடயங்கள் தவிர பிறவார்த்தை பேசாத பெருமகன் (அவரது வாய் எந்நேரமும் திருமுறையும், திருவாசகமும் இறைநாமமும் ஓதும் திருவாய்)

அவர் ஆசியோடு தொடங்கப் பெற்ற திருவாசக முற்றோதல் 1/4 நூற்றாண்டுகளிற்கு மேல் திண்ணபுரமெங்கும் ஒலித்து தெய்வீக அதிர்வுகளை ஏற்படுத்தி வருகின்றது.

இன்னவாறாக பல்வேறு வகைகளிலும் திருநெறித் தமிழ் மணக்க வாழ்ந்து வழிகாட்டிய அவர் பாதையில் பயணிப்போம். திருமுறை ஓதுவோம்.சிவநாமம் பேசுவோம்.

"ஓம் நமசிவாய"

**பழுக்கின்ற வாறும் பழம் உண்ணும் ஆறும்**
**குழக்கன்று துள்ளி அக்கோணியைப் பல்காற்**
**குழக்கன்று கொட்டிலில் கட்ட வல்லார்க்குள்**
**இழக்காது நெஞ்சத்து இடம் ஒன்றுமாமே**

திருமந்திரம் -1643

தவத்தால் பழுத்து முதிர்ந்த நிலை பெறுவது முதிர்ந்த தவயோகத்தால் ஆகிய பக்குவநிலை அடைந்து விட்ட பின்னர் துள்ளித் திரிகின்ற மனதை அடக்கும் மனத் தின்மை பெறுவர். அப்படிப்பட்டவர்களிற்கு மீண்டும் பிறவித் துயர் இல்லை, உடம்பெடுக்கும் நிலை அடையார்.

"ஓம் நமசிவாய"

க.கு.க சிவபாலன் மு.மு.மு
திருதிண்ணபுரத்தான் சிவதொண்டன்
"ஓம் நமசிவாய"



(C-6151)

# சூப் கட்டி போன்று பொதி செய்யப்பட்ட கொக்கேய்ன்

## கடத்திய வெளிநாட்டு பிரஜை கைது

(கொழும்பு)

350 கிராம் கொக்கேய்னுடன் மெசிடோனிய பிரஜை ஒருவர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரேஸிலிலிருந்து வந்த மெசிடோனிய பிரஜையின் சந்தேகத்துக்குரிய நடத்தை காரணமாக தடுத்து நிறுத்தப்பட்டு அவர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக சுங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தச் சோதனையின்போது அவரது பை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கொக்கேய்ன் கைப்பற்றப்பட்டது.

நான்கு பொதிகளில் இவை வைக்கப்பட்டு சூப் பொதிகள் போன்று பொதி செய்யப்பட்டிருந்ததாக சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த போதைப்பொருளின் பெறுமதி சுமார் இரண்டு கோடி ரூபாய் என சுங்க திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# பிரகாசிக்கும் சுற்றுலாத்துறை குவியும் டொலர்கள்

(கொழும்பு)

இலங்கை சுற்றுலாத்துறை மூலம் கடந்த பெப்ரவரி மாதத்தில் 169.9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானம் ஈட்டியுள்ளது. கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இலங்கை சுற்றுலாத் துறைக்கு ஏற்பட்ட பல பில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பானது, தற்போது நாடு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு வழிவகுத்தது.

எனினும், ஒவ்வொரு வாரமும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருவதால் சுற்றுலாத் தொழில் துறையின் எதிர்காலம் மீண்டும் நெருக்கடிக்குள்ளாகும் வாய்ப்புகள் குறைவாகும். (நி)

# 120,000 திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனையில் - மத்திய வங்கி

(கொழும்பு)

மார்ச் 15 ஆம் திகதி ஏல விற்பனையின் ஊடாக ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மில் லியன் ரூபாவுக்கான திறை சேரி உண்டியல்கள் வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வு காலத்தை கொண்ட 50 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்களும் 182 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 35 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்களும் 364 நாட்கள் முதிர்வு காலத்தை கொண்ட 35 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்களும் ஏலமிடப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 140 |
| பச்சைமிளகாய் | 300 | 320 | 350 |
| தக்காளி | 120 | 140 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 160 | 180 |
| கோவா | 80 | 80 | 100 |
| கரட் | 100 | 180 | 140-200 |
| பூசணி | 80 | 80 | 60 |
| புடோல் | 180 | 180 | 180 |
| வாழைக்காய் | 200 | 160 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 130 |
| பாகற்காய் | 200 | 400 | 400 |
| வெண்டக்காய் | 350 | 280 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 |
| பயற்றங்காய் | 250 | 160 | 200 |
| லீக்ஸ் | 120 | 220 | 250 |
| பீற்றூட் | 200 | 200 | 200 |
| கறிமிளகாய் | 350 | 240 | 280 |
| முருங்கைக்காய் | 1800 | 1800 | 1500 |
| போஞ்சி | 180 | 250 | 200 |
| கத்தரிதம்புள்ள | 130 | 100 | 150 |
| கீரை - 1 பிடி | 80 | 120 | 80 |
| தேசிக்காய் | 250 | 300 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 |
| இராசவள்ளி | 300 | 350 | 280 |
| வெங்காயப்பூ | 140 | 120 | 120 |
| முள்ளங்கி | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 140 | 100 |
| வல்லாரை | 40 | 25 | 50 |
| ஈரப்பலா | 80 | 120 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1



# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 126





இப்படியே எத்தனை நாள் படுத்திருப்பேன்? என்னைச் சேர்ந்தவர்கள் எல்லோருக்கும் பாரமாக! ஆனால் என் மனத்திற்குள் ஏதோ சொல்கிறது. அதிக காலம் நான் இந்தப் பூவுலகில் இருக்க மாட்டேன் என்று"

"சக்கரவர்த்தி! அரண்மனை வைத்தியர் தங்களுக்கு அபாயம் ஏதும் இல்லை என்று கூறுகிறார். சோதிடர்களும் அபாயம் இல்லையென்றே சொல்கிறார்கள். ஆனால் இந்தச் சிறு பிள்ளை தங்களிடம் ஏதோ அபாயத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான்."

"ஆ! இவன் காஞ்சி நகரிலிருந்து வந்த பிள்ளைதானே? ஆமாம். ஏதோ அபாயம் என்று சொன்னான் எதைப் பற்றிச் சொன்னாய், தம்பி? என்னுடைய நிலையைப் பற்றியா?"

வல்லவரையனுடைய மூளை மின்னல் வேகத்தில் வேலை செய்தது. 'அபாயத்தைப் பற்றித் தான் எச்சரித்ததாக ஒப்புக் கொண்டால் சந்தேகங்கள் ஏற்பட்டுத் தனக்கு அபாயம் நேருவது நிச்சயம். அந்த இக்கட்டிலிருந்து தப்ப வேண்டும். நல்லது ஓர் உபாயம் செய்து பார்க்கலாம். இலக்கணத்தைத் துணையாகக் கொண்டு நெடிலைக் குறில் ஆக்கலாம்!

"சக்கரவர்த்திப் பெருமானே! அபாயத்தைப் பற்றிச் சொல்வதற்கு நான் யார்? நம் வீர தளபதி சின்னப் பழுவேட்டரையரும் அரண்மனை வைத்தியரும் சாவித்திரி அம்மனையொத்த மகாராணியும் இருக்கும் போது என்ன அபாயம் வந்து விடும்? 'அபயம்' 'அபயம்' என்று தங்களிடம் நான் முறையிட்டுக் கொண்டேன். பழையவாணர் குலத்துக்கு நான் ஒரு அறியா சிறுவன் தான். இப்போது பிரதிநிதியாக மிஞ்சியிருக்கிறேன். தங்கள் திருப்புதல்வர் மனம் மகிழும்படி சோழப் பேரரசுக்குத் தொண்டு புரிந்து வருகிறேன்.

எங்கள் பழைய பூர்வீக ராஜ்யத்தில் ஒரு சிறு பகுதியையாவது அடியேனுக்குத் திருப்பிக் கொடுக்க அருள் புரிய வேண்டும். அரசர்க்கரசே! அபயம்! அபயம்! இந்த அறியாச் சிறுவன் தங்கள் அபயம்!" என்று வல்லவரையன் மூச்சு விடாமல் படபடவென்று பேசி நிறுத்தினான்.

இதைக் கேட்ட பழுவேட்டரையரின் முகம் சுருங்கியது. சுந்தர சோழரின் முகம் மீண்டும் மலர்ந்தது. மகாராணியின் முகத்தில் கருணை ததும்பியது.

"இந்தப் பிள்ளை பிறந்தவுடனே சரஸ்வதி தேவி இவனுடைய நாவில் எழுதி விட்டாள் போலும்! இவனுடைய வாக்குவன்மை அதிசயமாயிருக்கிறது!" என்றாள் தேவி.

இதுதான் சமயம் என்று வந்தியத்தேவன், "தாயே! தாங்கள் எனக்காகப் பரிந்து ஒரு வார்த்தை சொல்ல வேணும். நான் தாய், தந்தையற்ற அநாதை. வேறு ஆதரவு அற்றவன். என்னுடைய வேண்டுகோளை நானே தான் வெளியிட்டாக வேண்டும். பக்தனுக்குப் பரிந்து பார்வதி தேவி பரமசிவனாரிடமும் லக்ஷ்மிதேவி மகாவிஷ்ணுவிடமும் பேசுவது போல் தாங்கள் எனக்காகப் பேச வேண்டும். எங்கள் பூர்வீக அரசில் ஒரு பத்துக் கிராமத்தை திரும்பக் கொடுத்தாலும் போதும் நான் மிகவும் திருப்தி அடைவேன்!" என்றான்.

இதையெல்லாம் கேட்கக் கேட்கச் சுந்தர சோழருக்கு ஒரே வியப்பும் மகிழ்ச்சியுமாயிருந்தது. அவர் சின்னப் பழுவேட்டரையரைப் பார்த்து, "தளபதி! இந்த இளைஞனை எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. தேவியின் முகத்தைப் பார்த்தால், இவனை மூன்றாவது பிள்ளையாகச் சுவீகாரம் எடுத்துக் கொண்டு விடலாமா என்றே யோசிப்பதாகத் தெரிகிறது. இவனுடைய கோரிக்கையை நிறைவேற்றி வைக்கலாம் அல்லவா? அதில் ஒன்றும் கஷ்டம் இராதே? உமது அபிப்பிராயம் என்ன?" என்றார்.

"இதில் அடியேனுடைய அபிப்பிராயத்துக்கு இடம் என்ன இருக்கிறது? இளவரசர் கரிகாலரின் கருத்தையல்லவோ அறிய வேண்டும்?" என்றார் தஞ்சைக் கோட்டைத் தளபதி.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## விலங்குகள் பேசுவது புரிந்தால்

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். ஒருசமயம், காட்டு வழியாகச் சென்றான் அவன். அங்கே புலியிடம் சிக்கிக் கொண்டிருந்த துறவி ஒருவரைக் காப்பாற்றினான்.



மகிழ்ந்த துறவி பறவைகள், விலங்குகள் என்ன பேசினாலும் இன்று முதல் உனக்குக் கேட்கும். இப்படிப்பட்ட ஆற்றல் உனக்குக் கிடைத்திருக்கிறது என்ற உண்மையை யாரிடமும் சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னால் தலை வெடித்து நீ இறந்து விடுவாய். போய் வா என்றான். துறவியை வணங்கி விட்டு அரண்மனைக்குப் புறப்பட்டான் அவன். வழியில் இருந்த விலங்குகள், பறவைகள் பேசிக் கொள்வது அவனுக்குத் தெளிவாகக் கேட்டது. தற்செயலாகக் கிடைத்த விந்தையான ஆற்றலை எண்ணி மகிழ்ந்தான் அவன்.

இரவு நேரம் அவனும் அரசியும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள், அப்பொழுது சிறிதளவு தேனும் ஒரு உருண்டை சோறும் தவறித் தரையில் விழுந்தன.

அங்கிருந்த எறும்பு ஒன்று, ஓடி வாருங்கள். வேகமாக ஓடி வாருங்கள். நமக்கு இனி உணவுப் பஞ்சமே இல்லை. அரண்மனை மதுக் குடம் உடைந்து தேன் வெள்ளமாகப் பாய்கிறது. பெருஞ் சோற்று மலையே நமக்காகக் கிடக்கிறது என்று உரத்த குரலில் தன் கூட்டத்தை அழைத்தது.

இதைக் கேட்ட அரசன், இரண்டு சொட்டு தேன், தேன் வெள்ளமா? ஒரு உருண்டை சோறு பெருஞ் சோற்று மலையா? இந்த எறும்பிற்கு அறிவே இல்லையா? இப்படியா வர்ணிப்பது? என்று நினைத்தான், அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

தன்னை மறந்து கலகலவென்று சிரித்தான் அவன்.

அருகிலிருந்த அரசி, ஏன் சிரிக்கிறீர்கள்? என்று கேட்டாள்.

ஒன்றும் இல்லை, என்று மழுப்பினான் அவன்.

சாப்பிட்டு முடித்த அரசன் பட்டு மெத்தையில் படுத்தான். அரசி வெற்றிலை பாக்கு மடித்துத் தந்து கொண்டிருந்தாள். அறையில் இனிய மணம் பரவியது.

அங்கிருந்த ஆண் ஈ ஒன்று, பெண் ஈயை அழைத்து, எவ்வளவு இனிய சூழல் வா! நாம் இருவரும் அரசனின் முதுகில் இருந்து ஓடியாடி விளையாடுவோம். மகிழ்ச்சியா இருப்போம். இதைப் போன்ற நல் வாய்ப்பு யாருக்குக் கிடைக்கும்? என்றது.

என் முதுகு இந்த ஈக்களுக்கு மெத்தையா? என்று நினைத்தான் அரசன். அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. மீண்டும் கலகலவென்று சிரித்தான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நல்ல தலைவன் தான் தலைவன் என்பதை வார்த்தைகளால் அல்ல செயலால் உணர்த்துபவனாக இருக்க வேண்டும். - விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாதாள வைரவர் என்று போற்றிய எங்கள் கிணறுகள் பாழாகிப் போகிறதே!

தென்பகுதியில் இருந்து போத்தலில் அடைக்கப்பட்டு வருகின்ற குடிநீரைப் பருகுவதற்காக வருடந்தோறும் கோடிக்கணக்கான ரூபாய்களை வடமாகாணம் இழந்து வருகிறது என நீர்ப்பாசனப் பொறியியலாளர் சர்வராஜா அவர்கள் கூறிய கருத்தை நாம் அனைவரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

இலங்கைத் திருநாட்டில் கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட இயக்கச்சி என்ற இடத்திலுள்ள குடிநீரே மிகவும் தூய்மையானது என இனங்காணப்பட்டுள்ளது.

இருந்தும் தென்பகுதியில் இருந்து போத்தலில் அடைக்கப்பட்டு வருகின்ற குடிநீரைப் பருகுவதிலேயே நாம் ஆர்வம் காட்டிவருகிறோம்.

இதனால் ஏகப்பட்ட நிதி வடமாகாணத்தில் இருந்து தென்பகுதிக்குச் செல்கிறது என்பதையும் பொறியியலாளர் சர்வராஜா சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மை. இப்போது நம் வடபகுதி மக்கள் கிணற்று நீரைக் குடிநீராகப் பயன்படுத்துவதை முற்றாகத் தவிர்த்து வருகின்றனர்.

ஒரு காலத்தில் கிணறு வெட்டிக் கட்டி பாதாள வைரவர் என்ற பாவனையில் பொங்கல் செய்து படைத்து தூப தீபம் காட்டி கங்கை, யமுனை உள்ளிட்ட புனித நீர்நிலைகளுக்கு ஒப்பானதாக கிணற்று நீரைப் போற்றுகின்ற மரபு நம் வாழ்வியலோடு கலந்திருந்தது.

இதன் காரணமாகவே கிணற்றை மூடி வீடு கட்டுவது ஆகாது என நம் முன்னோர்கள் கூறிவைத்தனர்.

ஆக, கிணற்று நீரை கங்கைக்கு ஒப்பாக மதித்து அந்நீரை பருகி வந்த நம் வடபுலத்துத் தமிழ் பண்பாட்டில் இப்போது போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் ஊடுருவி, இனி போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் இல்லையேல் நம்மால் வாழ முடியாது என்ற நிலைக்கு நாம் ஆளாகிவிட்டோம்.

இதுதவிர, வடபகுதியில் இடம்பெறும் சடங்குகள், மாநாடுகள், திருமண வைபவங்கள் உள்ளிட்ட அனைத்து நிகழ்வுகளிலும் போத்தல் குடிநீர் வழங்குவது சர்வசாதாரணமாயிற்று.

அதிலும் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரையும் முழுமையாகப் பருகுவதென்றால் அதுவும் இல்லை.

ஆக, காசைக் கரியாக்குவது போத்தல் குடிநீர் விடயத்தில் நடந்தாகிறது.

இவ்வாறு தென்பகுதியில் இருந்து வருகின்ற போத்தல் குடிநீர் பயன்பாட்டைத் தூண்டுவதாக, கிணற்று நீருக்கு எதிரான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன என்பதையும் மறுப்பதற்கில்லை.

அனைத்துக் கிணறுகளிலும் நீர் மாசுபட்டுள்ளதாக முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்களால் எங்கள் அருமந்த கிணற்று நீர், குடிநீர் என்ற தகைமையை இழக்க வேண்டியதாயிற்று.

எனவே எங்கள் வீட்டு கிணற்று நீரைக் குடிநீராகப் பருகுவதை மீளவும் வலியுறுத்த வேண்டும்.

இல்லையேல் பொறியியலாளர் சர்வராஜா அவர்கள் கூறியதுபோல, குடிநீருக்காக எங்கள் உழைப்பில் பெரும் பகுதியை நாம் செலவிடுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# எரிபொருள் விநியோகத்தை விரிவுபடுத்த வேலைத்திட்டம் விரைவில் ஆரம்பம்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

எரிபொருள் விநியோகத்தை விஸ்தரிக்க அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும், அதற்கான முறையான வேலைத்திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சினோபெக் குழுமத்தின் பிரதிநிதிகளுடன் நேற்று (திங்கட்கிழமை) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தேவைக்காக எரிபொருள் இறக்குமதி, சேமிப்பு, விநியோகம் மற்றும் விற்பனை ஆகியவற்றில் முதலீடு செய்வதற்கு தமது நிறுவனம் தயாராக இருப்பதாக சினோபெக் குழுமத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அதற்காக, தற்போதுள்ள முறைமைக்கு அமைவாக தமது நிறுவனம் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவித்த குறித்த நிறுவனத்தின் பிரதிநிதிகள், அரசாங்கத்தினால் அடையாளம் காணப்பட்டுள்ள அம்பாந்தோட்டையில் பிரதான வலுசக்தி மையத்தை, சுத்திகரிப்பு நிலையத்துடன், நிர்மாணிக்கத் தேவையான முழு முதலீட்டையும் தமது நிறுவனம் செய்யத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளனர்.

எதிர்காலத்தில் நாட்டின் அபிலாஷைகளின் அடிப்படையில் உரிய அழைப்புகளுக்குப் பங்கேற்க தமது நிறுவனம் தயாராக இருப்பதாகவும் பிரதிநிதிகள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி, சேமிப்பு மற்றும் விநியோகம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த சினோபெக் நிறுவனத்தின் பிரதிநிதிகள், அது குறித்து தமது ஆலோசனைகளையும் ஜனாதிபதியிடம் முன்வைத்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் பின்னர், இலங்கை துரித அபிவிருத்தியை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ம-7)

# இலங்கையில் அதிகரிக்கும் விவாகரத்துக்கள்

(கொழும்பு)

இலங்கையில் விவாகரத்துக்கள் அதிகரித்து வருகின்றதாக இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் மாத்திரம் 8 ஆயிரத்து 431 விவாகரத்து வழக்குகளுக்கு சட்ட உதவி வழங்கப்பட்டுள்ளது.

பராமரிப்பு வழக்குகள் மற்றும் குடும்ப வன்முறை வழக்குகளில் குழந்தைகள், பெண்கள் மற்றும் பெரியவர்களுக்கு அவர்களின் வருமான பதிவுகளை அழைக்காமலேயே சட்ட உதவி வழங்கப்படுகிறது.

சனத்தொகையைப் பொறுத்தமட்டில் கிழக்கு மாகாணத்திலிருந்து அதிகளவான பராமரிப்பு வழக்குகள் பதிவாகியுள்ளன என இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் பிரதிப்பணிப்பாளர் கௌசல்யா ஹப்பு ஆராச்சி தெரிவித்தார்.

அதேவேளை 2011 முதல் 2021 வரையான 10 ஆண்டுகளில் 9,916, 540 பேருக்கு சட்ட உதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு மாத்திரம் 169, 215 பேருக்கு சட்ட ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் 49,479 பேர் சட்ட நடவடிக்கைகளில் ஆஜராகியுள்ளதாக பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ம-7)

# மகிந்தானந்தவை வழிமறித்தவர் பணி இடைநிறுத்தம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக கூறி, விமானப் பயணம் செய்யவிடாமல் திருப்பி அனுப்பிய குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரி தற்காலிக பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மற்றுமொருவரின் வெளிநாட்டு பயணத்தடையை குறிப்பிட்டு, முன்னாள் அமைச்சரை தடுத்து நிறுத்தியது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகழ்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய நேற்று தெரிவித்தார்.

இது கணனி பிழையா அல்லது கடமையிலிருந்த அதிகாரியின் மேற்பார்வையில் நடந்ததா என மேலும் ஆராய்ந்து அதிகாரி தொடர்பில் உறுதியான முடிவுக்கு வரவுள்ளதாக ஹர்ஷ இலுக்பிட்டிய மேலும் தெரிவித்தார். (ம-7)

# வருடாந்த பங்குனி பொங்கல் உற்சவம்

(சுழிபுரம்)

சுழிபுரம் அருள்மிகு வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான வருடாந்த பங்குனிப் பொங்கல் உற்சவமானது இன்று செவ்வாய்க்கிழமை விளக்கு வைப்புடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்து முதலாம் பொங்கல் உற்சவம் 21.03.2023 செவ்வாய்க்கிழமையும் எட்டாம் மடை எனப்படும் இரண்டாம் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 28.03.2023 செவ்வாய்க்கிழமையும் பக்தி பூர்வமாக இடம்பெறவுள்ளது.

பொங்கல் உற்சவ காலங்களில் வியாபாரங்களில் ஈடுபடவுள்ளோர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (19) மு.ப. 10.00மணிக்கு ஆலய காரியாலயத்தில் பதிவு செய்து தங்கள் வியாபாரங்களுக்கு உரிய தற்காலிக இடங்களை பெற்றுக் கொள்ள முடியும் என ஆலய பரிபாலன சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# தேர்தலுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணம் போதுமானதா?

## அமைச்சர் பிரசன்ன

(கொழும்பு)

வரவு - செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணம் போதுமானதா என்பதை தேர்தல்கள் ஆணைக்குழு பரிசீலிக்க வேண்டும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இந்த நேரத்தில் தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தேர்தல் முக்கியமா? மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் என்றும் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். (ம-7)

# அத்தியாவசிய சேவையாக அஞ்சல் சேவை பிரகடனம்

(கொழும்பு)

அஞ்சல் சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனப் படுத்தி ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுக்கமைய ஜனாதிபதிக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், இந்த பிரகடனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, மின்சாரம் வழங்கல் தொடர்பான சகல சேவைகள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் என்பனவும் தொடர்ந்தும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், வைத்திய சாலைகள் மற்றும் பராமரிப்பு சார்ந்த சகல சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப் படுத்தி முன்னதாக ஜனாதிபதியினால் அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில் நாச்சிக்குடாவில் மின் விநியோகம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் தினத்தை முன்னிட்டு வவு.பெண்கள் அமைப்பினர் பேரணி




(நெளுக்குளம்)
அமுதசுரபி அறக்கட்டளையின் அனுசரணையில் "எழுச்சியின் கரங்கள்" பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மகளிர் தினமும் எழுச்சி பேரணியும் சிதம்பரநகர் சக்தி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது

அமைப்பின் தலைவர் லோகேஸ்வரி விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை அதிதியாக ஓய்வுநிலை நூலகர் பாமினி உருசந்திரன் கலந்துகொண்டார். சிறப்பு அதிதியாக ஓய்வு நிலை ஆசிரியர் செம்மனச்செல்வி தேசிகன் கலந்து கொண்டார்.

முன்னதாக நிகழ்வு இடம்பெறும் மைதானம் வரை பெண்களின் பங்குபற்றுதலுடன் மாபெரும் எழுச்சிப்பேரணி இடம்பெற்றிருந்தது.

அதில் நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டதுடன், பெண்களின் விலங்கை உடைக்கும் ஆயுதம் கல்வியே, பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு வேண்டும் போன்ற கோசங்களையும் எழுப்பியிருந்தனர். (4-6-299)

# உள்ளூராட்சி தேர்தலின் பின் காவல் பிரிவு உருவாக்கப்படும்

## பூநகரி பொலிஸார் தெரிவிப்பு

(அக்கராயன்)
கிளிநொச்சி முக்கொம்பனில் உள்ளூராட்சித் தேர்தல் முடிந்தவுடன் காவல் பிரிவு உருவாக்கப்படும் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த 9 ஆம் திகதி மாலை பூநகரி பொலிஸார் முக்கொம்பன் கிராம பெண்களை சந்தித்துக் கலந்துரையாடினர். முக்கொம்பன் கிராமத்தில் இருந்து கசிப்பினை ஒழிப்பதற்கு முக்கொம்பன் கிராமத்தில் காவல் பிரிவு ஒன்றினை பொலிஸார் உருவாக்க வேண்டும் என இரணைமடுவில் அமைந்துள்ள கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் முக்கொம்பன் பெண்கள் ஒரு மாதத்திற்கு முன்னர் மனுக் கையளித்திருந்த நிலையில் பூநகரி பொலிஸார் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

உள்ளூராட்சித் தேர்தல் முடிந்தவுடன் பூநகரி பொலிஸ் நிலையம் ஊடாகவோ அல்லது அக்கராயன் பொலிஸ் நிலையம் ஊடாகவோ முக்கொம்பன் கிராமத்தில் பொலிஸ் காவல் பிரிவு ஒன்றினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பூநகரி பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-350)



உதயம் அறக்கட்டளையினால் யா/விக்ரோறியா கல்லூரியில் கல்வி கற்கும் 7 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் நேற்று அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன.

# கிராமங்களுக்குள் அதிகரிக்கும் போதைப்பொருள் பொது அமைப்புக்கள் ஒன்றுகூடி ஆராய்வு

(வவுனியா)
வவுனியா பூந்தோட்டம் பகுதிகளை அண்மித்த கிராமங்களுங்குள் போதைப்பொருள் பாவனை அதிகரித்து செல்கின்றமை தொடர்பாக பொது அமைப்புக்கள் கூடி நேற்று ஆராய்ந்துள்ளது.

குறிப்பாக பூந்தோட்டம், பெரியார்குளம், சிறிநகர், மதீனாநகர், மகாறம்பைக் குளம், அண்ணாநகர் போன்ற கிராமங்களுக்குள் போதைப்பொருள் பாவனையின் தாக்கம் அதிகரித்து செல்வதுடன், சிறுவர்களை இலக்குவைத்து இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனால் ஏற்படும் கலாசார சீரழிவுகளை தடுப்பதற்கான விரைவான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக குறித்த கிராமங்களை சேர்ந்த பத்திற்கும் மேற்பட்ட பொது அமைப்புக்கள் ஒன்றுகூடி ஆராய்ந்தன.

இதன்போது முதற்கட்டமாக குறித்த விடயம் தொடர்பாக நீதிவான், மாவட்ட அரச அதிபர், பிரதி பொலிஸ்மா அதிபர், பிரதேச செயலாளர், விசேட அதிரடிப்படை, மதுவரித் திணைக்களம் ஆகிய தரப்புகளுக்கு உடனடியாக குறித்த விடயத்தை தெரியப்படுத்தி விரைவான நடவடிக்கைகளை எடுப்பதற்கு வலியுறுத்துவதாக தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்களில் போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது. (4-6-299)

## நாடளாவிய ரீதியிலான போராட்டத்திற்கு

# இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கமும் முழு ஆதரவு

(யாழ்ப்பாணம்)
அடக்கு முறைகளையும் வரிச் சுமைகளையும் விலைவாசி உயர்வுகளையும் கட்டணங்களின் அதிகரிப்புகளையும் எதிர்த்து நாடளாவிய ரீதியில் அனைத்துத் தொழிற் சங்கங்களும் இணைந்து நடத்துகின்ற ஜனநாயகப் போராட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் இணைந்து கொள்கின்றது என அச் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா புவனேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.


அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அரசாங்கத்தின் தவறான வரிவிதிப்பு, மின்சாரக் கட்டண உயர்வு, வாழ்க்கைச் செலவு பன்மடங்கு அதிகரிப்பு, மக்களின் ஜனநாயக உரிமையை மறுத்தல், ஜனநாயக போராட்டங்கள் நசுக்கப்படுகின்றமை போன்ற அனைத்துத் தரப்பினரும் சொல்லொணா துன்பங்களை அரசாங்கம் கருத்தில் கொள்ளாததைக் கண்டித்து நடைபெறும் நாடளாவிய போராட்டத்தோடு அதிபர்கள், ஆசிரியர்களின் பல்வேறு பிரச்சினைகளை அரசாங்கம் தீர்க்காது தட்டிக் கழிப்பதையும் இணைத்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் போராட்டத்தில் இணைந்து கொள்கின்றது.

அதிபர், ஆசிரியர்களின் வேதன முரண்பாடுகள் இன்னும் தீர்க்கப்படாமை, பாடசாலை செல்வதற்கான போக்குவரத்து செலவு அதிகரிப்பு, வங்கிக் கடன் வட்டி வீதங்களின் அதிகரிப்பு, மாணவர்களின் போசாக்கு குறைபாடு, கற்றல் உபகரணங்களின் விலை உயர்வு, பொதுப் பரீட்சை மதிப்பீட்டின் முக்கியத்துவத்தை உணராமை, அதற்கான கொடுப்பனவுகளை அதிகரிக்காமை போன்ற கல்விப்புல பிரச்சினைகளையும் முன்வைத்து நாளை 15 ஆம் திகதி புதன் கிழமை நாடளாவிய போராட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முழுமையாக இணைந்து கொள்வதோடு அன்றைய நாள் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பாடசாலைக்குச் செல்லாது தமது எதிர்ப்பை வெளிப்படுத்துமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுக்கின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

# மணல் அகழ்வை தடுத்து நிறுத்த சென்ற அதிகாரிகளுக்கு மிரட்டல்

## மாந்தை மேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கண்டன போராட்டம்



(மன்னார்)
மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற சட்ட விரோத மணல் அகழ்வை தொடர்ந்து குறித்த நடவடிக்கையை தடுத்து நிறுத்தச் சென்ற மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களினால் கடுமையான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த சம்பவத்தை கண்டித்து நேற்று திங்கட்கிழமை காலை மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், கிராம அலுவலகர்கள் ஒன்றிணைந்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். மாந்தை மேற்கு பிரதேச செயலகத்திற்கு முன் அமைதியான முறையில் பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது தமது கடமையை உரிய முறையில் முன்னெடுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு இவ்வாறான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

அரச உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்துகின்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்:

மக்களும் எங்களுடன் இணைந்து இயற்கை வளங்களை பாதுகாக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தனர். (4-6-285)

# நூல்கள் அறிமுக நிகழ்வு

(வவுனியா)
விசுவமடு மத்திய சன சமூக நிலையத்துடன் காலையடி மறுமலர்ச்சி மன்றம் இணைந்து நடத்தும் நான்கு நூல்களின் அறிமுகமும் நாடக நிகழ்வும் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் விசுவமடு மத்திய சனசமூக நிலைய பிரதான மண்டபத்தில் பிரபல கவிஞரும் ஆய்வாளருமான சி. கருணாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றிலிருந்து...

பகுதியைச் சேர்ந்த 57 வயதான சோதீஸ்வரி என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணுடைய சடலம் மீட்கப்பட்டு மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,30)

## சாதாரண தரப்...

கள் தாமதமாகியுள்ள நிலையில் சாதாரண பரீட்சையை ஒத்திவைக்க நேரிடும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு பரீட்சைகளுக்கிடையில் மூன்று மாத கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (ம-7)

## ஐ.எம்.எப் நிபந்...

ஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலை நடத்தினால் மீண்டும் அத்தியாவசிய சேவை விநியோக கட்டமைப்பில் நெருக்கடி ஏற்படும்.

ஆகவே பொருளாதாரத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுத்த வேண்டிய தேவை காணப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் இம்மாத இறுதிக்குள் கைச்சாத்திடப்படும் என கூறினார்.

நாட்டில் நிதி நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் பொருளாதார மீட்சிக்கு அரசாங்கம் என்ற ரீதியில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ம-7)

## தேர்தல்...

ளோம் என மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மினுவாங்கொடை பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணைக்குழுவுக்கு எரிபொருளை விநியோகிக்க வலுசக்தி அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளமை அடிப்படையற்றது.

அரசாங்க தரப்பு வேட்பாளர்கள் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபடாமல் உள்ளார்கள்.

ஆனால் கடந்த காலங்களில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டபோது கறுப்புச் சந்தை ஊடாக எரிபொருளை பதுக்கி வைத்த மக்கள் விடுதலை முன்னணியினரும் ஐக்கிய மக்கள் சக்தியினரும் தற்போது அதனைப் பயன்படுத்தி முழு நாட்டையும் வலம் வருகிறார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட 80 ஆயிரத்திற்கும் அதிகமான வேட்பாளர்கள் தயாராக உள்ளார்கள், எரிபொருள் கோட்டாவை அதிகரிக்க வேண்டுமாயின் அனைவருக்கும் கோட்டாவை அதிகரித்துக் கொடுக்க வேண்டும், தற்போதைய நிலையில் மருத்துவ சேவைக்கு மாத்திரமே எரிபொருள் விநியோகத்தில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு எரிபொருள் விநியோகத்தில் முன்னுரிமை வழங்க முடியாது என்றார். (ம-7)

## ரூபாயின்...

தேர்தலை நடத்தலாமா? வேண்டாமா? என்று முடிவு செய்யவும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மக்கள் கொந்தளிப்பை சமாளிக்கவும், மக்களை ஏமாற்றவும் இந்த கட்டுக்கதை பயன்படுவதாக கூறியுள்ளார்.

அத்தோடு நாடு அபிவிருத்தி அடைந்து வருகின்றது என்றும் தற்போதைய அரசாங்கத்தை மாற்ற வேண்டிய அவசியமில்லை என்றும் கூட கட்டுக்கதைகள் பயன்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கருத்தில் கொண்டு மத்திய வங்கி முடிவுகளை எடுப்பதில்லை என்றும் இதிலும் அரசாங்கத்தின் உந்துதல் காணப்படுவதாகவும் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார். (ம-7)

## தேர்தல் தொடர்...

கப்படும் என்று ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (ம-7)

## யாழில் வன்...

பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து, இரண்டு வாள்கள் மற்றும் களவாடப்பட்ட 3 மூன்று மோட்டார் சைக்கிள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த நபர்கள் மோட்டார் சைக்கிள்களை களவாடி, அவற்றுக்கு போலி இலக்க தகடுகளை பொருத்தி வன்முறை சம்பவங்கள் மற்றும் சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளனர் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதேவேளை கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் காரைநகர் பகுதியில் உள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் மேற்கொண்டு வீட்டிற்கு தீ வைத்து ஒன்றரைக்கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்ட சம்பவத்துடன் இவர்களுக்கு தொடர்பு உள்ளதாகவும், நாவற்குழி பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவத்துடன் இவர்களுக்கு தொடர்பு இருப்பதாகவும் பொலிஸ் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் நவாலி, மானிப்பாய், காரைநகர் மற்றும் கிளிநொச்சி விசுவமடு பகுதிகளை சேர்ந்த 24 வயது தொடக்கம் 26 வயதிற்கு இடைப்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,33,104)

## 40...

நாட்டு மக்களை வாழ்க்கை நெருக்கடிக்குள் தள்ளியுள்ள அரசாங்கத்தின் முறையற்ற வரிக்கொள்கைளை உடனடியாக திருத்த வேண்டும் என்ற முக்கிய கோரிக்கையுடன், மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்கங்கள் இந்த ஒரு நாள் வேலைநிறுத்தத்தை அறிவித்துள்ளன.

இது காலவரையறையற்ற வேலை நிறுத்தமாக நீடிக்கலாம் என தொழிற்சங்க தலைவர்கள் கூறுகின்றனர்.

தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த 40 முக்கிய தொழிற்சங்கங்கள் மற்றும் மேலும்பல தொழிற்சங்கங்களும் இந்தவேலைநிறுத்தத்தில் ஈடுபட வுள்ளன.

வரிச்சலுகைக்கு எதிராக 40 தொழிற்சங்கங்களும் வெகுஜன அமைப்புகளும் கடந்த 1ஆம் திகதி ஒரு நாள் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தன. ஆனால் அரசாங்கம் போராட்டத்தை கண்டுகொள்ளவில்லை.

இதையடுத்து, இரண்டாவது முறையாக நாளை புதன்கிழமை இந்த ஒரு நாள் வேலைநிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## தேர்தலுக்கு...

அமைச்சர் மேலும் கூறியதாவது,

இந்த நேரத்தில் நாம் தேர்தலுக்குச் சென்றால், மக்கள் மிகவும் சிரமப்படுவார்கள். வாழ்க்கைச் சுமை அதிகரிக்கும். முதலில் நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட வேண்டும். அதுதான் கடந்த காலத்தில் இல்லாமல் இருந்தது. மக்கள் கொல்லப்பட்டனர், வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டது, மக்கள் துன்புறுத்தப்பட்டனர், பொலிஸ் அதிகாரிகள் கழுத்தைப் பிடித்து வீதிக்கு இழுத்துச் சென்றனர். நாட்டில் சட்டம் ஒழுங்கு இல்லை. அன்று சட்டத்தை மீறியவர்கள் இன்று ஜனநாயகம் பற்றி பேசுவது வேடிக்கையாக உள்ளது. அமைதியையும், சட்டத்தையும் ஏற்படுத்திய பின், நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த வேண்டும். மக்களின் வாழ்க்கைச் சுமையை நீக்கி மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்றார். (ம-7)





































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டம் தமிழருக்கு எதிராக உருவாகியது

## யாழ். பல்கலைக்கழக மாணவர்களை பாராட்டிய மனோ எம்.பி

பயங்கரவாத தடை சட்டம் என்பதே தமிழருக்கு எதிராக 1979ல் உருவாகியது. ஏறக்குறைய 44 வருடங்களாக தமிழர், தமிழ்க் கட்சிகள், தமிழ் மாணவர்கள், தமிழ், இளைஞர்கள், தமிழ் தாய்மார்கள் போராடும்போது, வாளாவிருந்து விட்டு, இப்போது திடீரென தூக்கத்தில் இருந்து எழுந்து, வாகனம் பிடித்து, யாழ்ப்பாணத்துக்கு போய், "பயங்கரவாத தடை சட்டத்தை எதிர்க்க யாழ் பல்கலையும் இணைய வேண்டும்" என, அனைத்து பல்கலைக்கழக ஒன்றிய அழைப்பாளர் வசந்த முதலிகே முதலானோர் கோரியமை நகைப்புக்கு இடமானது. மறுபுறம், இத்தகைய கோரிக்கைக்கு இணைகிறோம், ஆனால், எமது பிரச்சினைகளையும் உள்வாங்குங்கள் என யாழ் பல்கலை மாணவர் ஒன்றியம் பதில் அளித்துள்ளமையை பாராட்டுகிறேன் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

இது தொடர்பில் மனோ எம்.பி மேலும் கூறியுள்ளதாவது,

பயங்கரவாத தடை சட்டம் என்பதே தமிழருக்கு எதிராக 1979ல் உருவாகிய சட்டமாகும். ஏறக்குறைய 44 வருடங்களாக நம்மை போட்டு பாடு படுத்தும் சட்டம். இதை எதிர்கொண்டு, நம்மில் எத்தனையோ பேர் மாண்டு போனோம். இன்னும் எத்தனையோ பேர் சிறையில் வாழ்வை இழந்தோம். இன்னும் இழந்தப்படி இருக்கிறோம். எத்தனையோ குடும்பங்கள் அனாதரவாக வாடுகின்றன.

2006-2009 கொழும்பு மாநகரில் இந்த சட்டத்தை காட்டி வெள்ளை வானில், தமிழரை நாய் பிடிப்பதை போல் கடத்திக் கொண்டு போனார்கள். அதை எதிர்த்து போராடிய என்னையும் 2007 ம் ஆண்டு ஒருமுறை கைது செய்தார்கள். கொலை செய்ய முயன்றார்கள்.

இப்போது, கடந்த சில மாதங்களில், வசந்த முதலிகே, சிறி தம்ம தேரர் போன்ற சில தென்னிலங்கை சிங்கள போராளிகளை இச்சட்டம் பதம் பார்க்கும் போது, திடீரென தூக்கத்தில் இருந்து எழுந்து, வாகனம் பிடித்து, யாழ்ப்பாணத்துக்கு போய், அங்கே யாழ் பல்கலை இளம் பசங்களிடம், "பயங்கரவாத தடை சட்டத்தை எதிர்த்து நாம் போராடுகிறோம். நீங்களும் சேர்ந்து கொள்ளுங்கள்" எனக்கோருவது, 2023 இன் மிக சிறந்த நகைச்சுவையாக தோன்றுகிறது என்றார். (ம-7)

# ரூபாவின் பெறுமதி அதிகரிப்பதன் மூலம் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது

## ஜே.வி.பி தலைவர் அநுர

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை அதிகரிப்பதன் மூலம் மாத்திரம் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என தேசிய மக்கள் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுரதிஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற கட்சியின் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியஅவர், நாட்டின் அபிவிருத்திக்கு ஒட்டுமொத்த மாற்றம் அவசியம் எனத் தெரிவித்தார்.

டொலருக்கான தேவை குறைவு, பொருளாதாரச் சரிவு, இறக்குமதித்தடை, டொலரின் நிரம்பல் அதிகரிப்பு போன்ற காரணங்களால் ரூபாவின் பெறுமதி வலுப்பெற்றுள்ளது என்றார்.

விரும்பிய இலக்குகளை அடையத் தேவையான மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக, ஒட்டு மொத்த மாற்றத்தை எளிதாக்கும் வகையில் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்று அவர் கூறினார்.

ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்க புதிய சந்தைகளைக் கண்டறிந்து பெறுமதி கூட்டப்பட்ட பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்க வேண்டும் என்றார். (ம-7)

# பொதுத் தேர்தலுக்கு இடமளியுங்கள் - கர்தினால்

(கொழும்பு)

அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா செய்து புதிய அரசாங்கத்தை மக்கள் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் நேற்று தெரிவித்துள்ளார்.

இன்று நாட்டை ஆள்பவர்கள், தேசம் கவலை கொள்ளும் ஒரு பரிதாபமான நிலையை உருவாக்கியுள்ளனர். எனவே அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் முதுகெலும்பு இருந்தால் பதவியை இராஜினாமா செய்து ஒரு புதிய நிர்வாகத்தை மக்கள் தெரிவு செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் மேலும், நீதித்துறையின் அதிகாரத்தை இழிவுபடுத்துவதில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட எம்.பி.க்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கர்தினால் கேட்டுக் கொண்டார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் தலையிட யாருக்கும் அதிகாரம் இல்லை. உயர் நீதிமன்றம் மார்ச் 3, 2023 அன்று வழங்கிய தீர்ப்பு ஜனாதிபதி, அரசாங்கம் மற்றும் பாராளுமன்றத்தை சமமாக கட்டுப்படுத்துகிறது என்பது தெளிவாகிறது. எனவே, அவர்கள் எடுத்த முடிவை உண்மையாக பின்பற்ற வேண்டும். இல்லையேல் அவர்கள் உயர் நீதிமன்றத்தின் அதிகாரத்தை குறைத்து ஜனநாயகத்தின் அடிப்படையை குறைமதிப்பிற்கு உட்படுத்துவார்கள் என்று கர்தினால் கூறினார். (ம-7)


வாலையம்மன் சன சமூக நிலையத்தின் அனுசரணையுடன்
நொதேண் விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும்
மரபியல் பொங்கல் விழாவினை முன்னிட்டு
வாலையம்மன் சன சமூக நிலைய முன்னாள் உறுப்பினர்
அமரர் சிங்கராஜா ஜெகதீஸ்குமார் (தீசன்) ஞாபகார்த்த

**மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி**

**காலம் : 17.03.2023 வெள்ளிக்கிழமை காலை 6 மணி**
**ஆரம்பிக்கும் இடம் : வாலையம்மன் சன சமூக நிலைய முன்றல், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.**

கலந்துகொள்ள விரும்புவோர் கீழ்க் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் வரவினை 16.03.2023 இற்கு முன்னர் உறுதிப்படுத்தி போட்டி ஆரம்பிப்பதற்கு ஒரு மணி நேரம் முன்னதாக மருத்துவ சான்றிதழுடன் சமூகம் தரவும்.

தொடர்புகளுக்கு : 077 299 8504, 077 868 3397

பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.
நன்றி



(14896)
வாலையம்மன் சன சமூக நிலையமும்
நொதேண் விளையாட்டுக் கழகமும்



**உடனடி வேலை வாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு (C-6154)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



**உடனடி வேலை வாய்ப்புக்கள்**
EXECUTIVE OFFICER



✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)
(C-6154)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து
உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777



**கணித/ விஞ்ஞான வகுப்புக்கள்**
தரம் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. 16.03.2023 தொடக்கம் - 2023 ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகிறது.
**மாதாந்தம் மீளாய்வு பரீட்சைகள் நடைபெறும்.**
தொடர்புகளுக்கு (14878)
077 310 1462 / 077 017 5036



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
**ஆகாஸ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14889)
076 825 7716 (ஆகாஸ்)



**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
Hero Honda - CD 100SS
H - தொடரிலக்கம்
Mitsubishi - L 300 Lorry
47 - தொடரிலக்கம்
என்பன விற்பனைக்கு உண்டு. (14891)
075 887 5036



**யா/ டிறிபேக் கல்லூரி**
**பழைய மாணவர், ஆசிரியர் சங்க உறுப்பினர் கலந்துரையாடல்**
இடம் : நாகேந்திரராஜா மண்டபம்
காலம் : 25.03.2023 சனிக்கிழமை
நேரம் : 9.30 மணி
தலைமை : திரு.செ.பேரின்பநாதன் (கல்லூரி அதிபர்)
விடயங்கள்
01. கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழா சம்பந்தமான கலந்துரையாடல்.
02. 2023, 2024 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட இருக்கும் வேலைத்திட்டங்கள் பற்றிய கலந்துரையாடல்.
03. 2022 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் பற்றி தெரியப்படுத்தல்.

மேற்படி கலந்துரையாடலில் அனைத்து பழைய மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்துகொண்டு ஆலோசனை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர் திரு.செ.பேரின்பநாதன் (C-6151) செயலாளர் திரு.மு.ஸ்ரீ பாஸ்கரன்



**வேலை வாய்ப்பு**
இலங்கையின் பிரதான நிதி நிறுவனம் ஒன்றின் வடமராட்சி கிளையில் வேலைக்கான வெற்றிடங்கள் உள்ளது.
O/L இல் கணிதபாடம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி உள்ளவர்கள் 17.03.2023 இற்கு முன்பாக உங்கள் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (14886)
077 803 9320
075 269 0188



**வாகனம் குத்தகைக்கு தேவை**
வான்கள், கார்கள் குத்தகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு : (14888)
077 489 1279



**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் தாவடியில் 5 பரப்பு காணி விற்பனைக்கு
● மூன்று பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
● KKS வீதியில் இருந்து இரண்டாவது காணி
● தாவடி சந்தியில் இருந்து 100 m தூரத்தில் (14892)
076 436 5814



**விற்பனையாளர் பெண்கள் தேவை**
எமது புடவை நிறுவனத்திற்கு புடவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள மற்றும் தொழில் பழக விரும்பும் பெண் விற்பனையாளர் தேவை. (14894)
சென்னை பெசன்
இல.63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.